**இந்திய உயர் ஸ்தானிகராலயம்**
**கொழும்பு**
***************

**<u>ஊடக அறிக்கை</u>**

# <u>தமிழ் தேசிய கூட்டமைப்பின் பிரதிநிதிகளுடன் உயர் ஸ்தானிகர் சந்திப்பு</u>

பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ. இரா.சம்பந்தன் அவர்கள் தலைமையில் ஐந்துபேரடங்கிய தமிழ் தேசிய கூட்டமைப்பின் பிரதிநிதிகள் குழுவினர் இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ கோபால் பாக்லே அவர்களை சந்தித்துள்ளனர். ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த இந்த சந்திப்பானது இன்றைய தினம் (17 ஜூன் 2021) இந்திய இல்லத்தில் நடைபெற்றுள்ளது. இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான கௌரவ தர்மலிங்கம் சித்தார்த்தன், கௌரவ.செல்வம் அடைக்கலநாதன் மற்றும் கௌரவ.எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர். இதேவேளை, பிரதி உயர் ஸ்தானிகர் திரு.வினோத் கே ஜேக்கப் மற்றும் அரசியல் பிரிவுக்கான கவுன்சிலர் திருமதி.பானு பிரகாஷ் ஆகியோர் உயர் ஸ்தானிகருடன் இந்த சந்திப்பின்போது இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது

கொவிட் நோய்க்கு பின்னரான காலப்பகுதியில் இருநாடுகளுக்கும் இடையிலான தொடர்பினை மேம்படுத்துதல் மற்றும் இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதிகளில் அபிவிருத்தி ஆகிய விடயங்களும் இந்த சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டிருந்தது. வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள மக்கள் உட்பட அனைத்து இலங்கையர்களும் சமாதானத்தின் நலன்களை அனுபவிப்பதை உறுதிப்படுத்தும் வகையில் வீடமைப்பு திட்டம் போன்ற திட்டங்களால் சமூக உட்கட்டமைப்பு ஒன்றினை உருவாக்குதலை நோக்கி நிலையான பங்களிப்பினை இந்தியா வழங்கி வருவதனை உயர் ஸ்தானிகர் எடுத்துரைத்திருந்தார். அத்துடன் தொடர்பாடல், சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற துறைகளில் அபிவிருத்தியினை மேற்கொள்வதற்கும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்காகவும் இந்தியா தனது ஆதரவினை தொடர்ந்து வழங்கும் என்றும் உயர்ஸ்தானிகர் இந்த சந்திப்பில் வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு கிழக்கு மக்களின் அபிவிருத்திக்கான அபிலாசைகள் மற்றும் அதிகாரப் பகிர்வு குறித்த பல்வேறு நோக்குகள் தொடர்பாகவும் இரு தரப்பினரும் இந்த சந்திப்பின்போது கலந்துரையாடியிருந்தனர். இலங்கையின் அரசியலமைப்பு மற்றும் ஆட்சியமைப்பின் ஒருங்கிணைந்த பகுதியான மாகாணசபை தேர்தல்கள் தொடர்பான தற்போதைய நிலை குறித்து தமிழ்

தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் குழுவினர் உயர் ஸ்தானிகருக்கு தெரிவித்திருந்தனர். சமத்துவம், சமாதானம், நீதி மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றுக்கான தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு அமைவாகவும் வலுவான இலங்கையை உருவாக்கவும் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துதல் என்ற அடிப்படையில் ஐக்கிய இலங்கை என்ற கட்டமைப்பிற்குள் அதிகாரங்களை பகிர்வதற்கான இந்தியாவின் ஆதரவினையும் உயர் ஸ்தானிகர் இந்தச் சந்தர்ப்பத்தில் வலியுறுத்தியிருந்தார்.

********

கொழும்பு
17 ஜூன் 2021